**செய்தி வெளியீடு எண்: 198** **நாள்: 22.03.2013**

2013-2014–ஆம் கல்வியாண்டிற்கு பகுதிநேர பொறியியற் பட்டப்படிப்பு (B.E./B.Tech.) சேர்க்கைக்கான விண்ணப்பப் படிவங்கள் கீழ்க்காணும் பொறியியற் கல்லூரிகளில் **01.4.2013 முதல் 15.4.2013** முடிய பயிலக வேலை நாட்களில் காலை 10.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை வழங்கப்படும்.

| வ. எண். | கல்லூரியின் பெயர் | இடம் | பின்கோடு |
|---|---|---|---|
| 1 | அரசினர் பொறியியற் கல்லூரி | கோயம்புத்தூர் | 641 013 |
| 2 | அரசினர் பொறியியற் கல்லூரி | சேலம் | 636 011 |
| 3 | அரசினர் பொறியியற் கல்லூரி | திருநெல்வேலி | 627 007 |
| 4 | அழகப்ப செட்டியார் பொறியியற் கல்லூரி | காரைக்குடி | 630 004 |
| 5 | தந்தை பெரியார் அரசினர் பொறியியற் கல்லூரி | வேலூர் | 632 002 |
| 6 | அரசினர் பொறியியற் கல்லூரி | பர்கூர் | 635 104 |
| 7 | பி.எஸ்.ஜி. பொறியியற் கல்லூரி | கோயம்புத்தூர் | 641 004 |
| 8 | கோயம்புத்தூர் இன்ஸ்டிடியூட் ஆஃப் டெக்னாலஜி | கோயம்புத்தூர் | 641 014 |
| 9 | தியாகராஜர் பொறியியற் கல்லூரி | மதுரை | 625 015 |
| 10 | தொழில் நுட்பக் கல்வி இயக்ககம் | சென்னை | 600 025 |

விண்ணப்ப படிவங்களை நேரடியாகவும் / அஞ்சல் மூலமாகவும் பெற விரும்புவோர், பிற இனத்தவர் ரூ.300/–ம் மற்றும் தமிழ்நாட்டைச் சார்ந்த பட்டியல் / பழங்குடி (ST/SC/SCA) இனத்தவர் ரூ.150/–க்குமான கேட்பு வரைவோலையினை (Demand Draft) “The Secretary, Part time B.E. / B.Tech. Admissions, Coimbatore” என்ற பெயரில் கோயம்புத்தூரில் காசாக்கும் வகையில் (Payable at Coimbatore) எடுத்து விண்ணப்பங்களை மேற்காணும் விண்ணப்பம் விற்பனை மையங்களில் பெற்றுக் கொள்ளலாம். பழங்குடி மற்றும் பட்டியல் இனத்தவர்கள் கேட்பு வரைவோலையுடன், சான்றிடப்பட்ட (Attested) தங்களது சாதிச் சான்றின் நகலினை (Xerox copy) இணைக்க வேண்டும்.

அஞ்சல் மூலமாக பெற விரும்புவோர், கேட்பு வரைவவோலையுடன் சுய விலாசமிட்ட 35 செ.மீ x 25 செ.மீ அஞ்சல் உறையில் ரூ.50/-க்கு அஞ்சல் வில்லை ஒட்டி “The Secretary, Part time B.E. / B.Tech. Admissions, Coimbatore Institute of Technology Coimbatore” என்ற முகவரிக்கு கடிதம் மூலம் அனுப்பி பெற்றுக்கொள்ளலாம்

மாணவர்கள் கலந்தாய்வுக்கு மே 2013-ல் அழைக்கப்படுவார்கள். இதற்கான அழைப்பு உரியவர்கட்கு தபால் மூலம் தெரிவிக்கப்படும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் “The Secretary, Part-time B.E. / B.Tech. Admissions, Coimbatore Institute of Technology, Coimbatore 641014” என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்படவேண்டும். விண்ணப்பங்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள்: **15.4.2013**

தொழில் நுட்பக் கல்வி ஆணையர்(பொ)

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை.9**